KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

**HURAIAN SUKATAN PELAJARAN**
**KURIKULUM BERSEPADU SEKOLAH MENENGAH**

# BAHASA TAMIL

## தமிழ்மொழி

## TINGKATAN / படிவம் 4

## KBSM

Pusat Perkembangan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# பொருளடக்கம்

| | |
|---|---|
| ருக்குன் நெகாரா | v |
| தேசியக் கல்வித் தத்துவம் | vii |
| இயக்குநர் உரை | ix |
| முன்னுரை | 1 |
| குறியிலக்கு | 2 |
| நோக்கம் | 2 |
| கலைத்திட்ட அமைப்பு | 3 |
| பிறரிடைத் தொடர்புத்துறைக்கான கற்றல்பேறு | 4 |
| இலக்கணம் | 61 |
| இலக்கியம் | 64 |

# ருக்குன் நெகாரா

இறைவன்மீது நம்பிக்கை வைத்தல்
பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## KATA PENGANTAR

Huraian Sukatan Pelajaran ialah dokumen yang memperincikan Sukatan Pelajaran yang bertujuan untuk memenuhi cita-cita murni dan semangat Falsafah Pendidikan Kebangsaan, dan menyediakan murid menghadapi arus globalisasi serta ekonomi berasaskan pengetahuan pada abad ke-21.

Dokumen ini menyarankan strategi pengajaran dan pembelajaran yang merangkumi pelbagai aktiviti dan penggunaan sumber. Guru digalakkan menggunakan kreativiti untuk memilih, menyusun dan mengolah aktiviti mengikut kesesuaian murid. Huraian ini diharapkan dapat membantu guru merancang dan melaksanakan pengajaran dan pembelajaran secara berkesan.

Dalam melakukan aktiviti pengajaran dan pembelajaran, guru diharapkan dapat memberikan penekanan pada unsur bernilai tambah yang difikirkan sesuai dalam aspek pedagogi. Di samping itu, nilai murni dan semangat patriotik serta kewarganegaraan tetap diutamakan. Semua elemen ini diharapkan dapat memberikan keyakinan kepada murid dan boleh diaplikasikan dalam kehidupan harian dan dunia pekerjaan.

Guru perlu sentiasa peka terhadap tahap penggunaan dan penguasaan bahasa Tamil murid dengan mengambil kira kesepaduan ilmu, nilai dan amalan. Pengajaran dan pembelajaran dirancang supaya dapat melahirkan murid yang boleh berkomunikasi serta meneruskan warisan budaya Tamil yang sesuai dengan kesejahteraan diri, masyarakat dan negara.

Dalam menyediakan Huraian Sukatan Pelajaran yang disemak semula ini banyak pihak yang terlibat terutama guru, pensyarah maktab dan universiti, pegawai Kementerian Pendidikan, dan individu yang mewakili badan-badan tertentu.

Kepada semua pihak yang telah memberikan sumbangan kepakaran, masa, dan tenaga sehingga terhasilnya Huraian Sukatan Pelajaran ini, Kementerian Pendidikan merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih.

**(Dr. SHARIFAH MAIMUNAH BT. SYED ZIN)**
Pengarah
Pusat Perkembangan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

## முன்னுரை

நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப, இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதற்குரிய கலைத்திட்டம் தொடக்கப்பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தொடக்கப்பள்ளியில் பெற்ற தமிழ்மொழியாற்றலை மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளிலும் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத்திட்டம் வலியுறுத்துகிறது.

நாட்டின் தொலைநோக்குக் கொள்கைக்கேற்ப, மலேசிய மக்களிடையே ஒற்றுமையுணர்வையும் நாட்டுப்பற்றையும் மேலும் வளர்ப்பதற்கு இக்கலைத்திட்டம் முதன்மையளிக்கிறது. தமிழ் பேசுவோர் மட்டுமல்லாமல் பிறமொழிக்காரர்களும் தமிழைப் பயிலுவதற்கு ஏற்றவாறும் இக்கலைத்திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வழங்கும் நாடுகளுக்கிடையே சமூக, பண்பாடு, வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் தமிழ்மொழியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது. இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்கள் பொதுநோக்கமும் பரந்த அறிவும் பெற்றவராகத் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நூலறிவு, நன்னெறியுணர்வு, சிந்தனைத்திறன், தகவல் தொழில்நுட்பத் தொடர்பு ஆகிய கூறுகளும் வலியுறுத்தப்படுகின்றன.

இந்த ஆவணம், இடைநிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்படவேண்டிய தமிழ்மொழிக்கான முழுமையான பாடத்திட்டமாகும். மாணவர்கள் அடையவேண்டிய குறியிலக்கு, நோக்கம், கற்றல்பேறு ஆகியன வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கமாக மொழிப்பயன்பாடு, மொழித்திறன், மொழிவளம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு படிவம் ஒன்று முதல் ஐந்து வரை ஒவ்வொரு படிவத்திற்கும் தனித்தனியே பாடத்திட்ட விளக்கவுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கவுரைகளில் அவ்வவ்வாண்டிற்கான திறன்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**குறியிலக்கு**

சமுதாயத் தொடர்பினை மேம்படுத்துதல், தகவல்களை முறையாகப் பெற்றுக் கையாளுதல், தமிழ்மொழியினைப் போற்றிப் பேணுதல் ஆகியவற்றில் மாணவர்கள் சிறந்து விளங்க நல்ல தமிழறிவைப் பெறவேண்டும் என்பதே இக்கலைத்திட்டத்தின் குறியிலக்காகும்.

**நோக்கங்கள்**

இடைநிலைப்பள்ளியின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. பேச்சு அல்லது எழுத்தின்வழி பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல், சிக்கல்களைக் களைதல், தேவைகளை நிறைவு செய்தல், தேவைப்படும் சேவைகளையும் பொருள்களையும் கேட்டுப்பெறுதல் ஆகியவற்றைத் திறமையாக மேற்கொள்ளுதல்.

2. அறிவும் கருத்தும் பெறுவதற்குப் பல்வேறு மூலங்களிலிருந்து பார்த்த, கேட்ட, வாசித்த தகவல்களை ஆராய்ந்து அறிதல்.

3. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் சிக்கல்களைக் களைந்து அவற்றை வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும் பிறருக்கு வெளியிடுதல்.

4. பல்வேறு படைப்புகளைப் பார்த்தும், கேட்டும், வாசித்தும் அவற்றிற்கேற்ப துலங்குதல்.

5. தன் சிந்தனையைப் படைப்பாற்றலுடன் வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும், விளைபயனுள்ள வகையில் வெளியிடுதல்.

6. நன்னெறிப்பண்பு, இணக்கப்போக்கு, நாட்டுப்பற்று ஆகியவற்றை உய்த்துணர்ந்து அதன்படி நடத்தல்.

**பாடத்திட்ட அமைப்பு**

சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் நல்ல தமிழ்மொழி வழக்கின் அடிப்படையில் இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல்பேறுகள் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**கற்றல்பேறு**

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு கற்றல்பேறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கற்றல்பேறுகளை மாணவர்கள் முழுமையாக அடையும் வகையில் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். கற்றல்பேறுகள், மொழித்திறன்களையும் மொழிமுறைமையில் அடங்கியுள்ள மொழிப்பயன்பாட்டு விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றோடு கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள தலைப்புகளையும் அவை உள்ளடக்கியுள்ளன.

**1.0 பிறரிடைத் தொடர்புத்துறைக்கான கற்றல்பேறு.**

பிறரிடைத் தொடர்புத்துறையானது மாணவர்களின் சமூகத்திறமையை மையமாகக் கொண்டுள்ளது. பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவும் அதனை நிலைபெறச்செய்யவும், உணர்வு, சிந்தனை, கருத்து ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் இத்துறை உதவுகிறது. கலந்துரையாடலின்வழி சேவைகளையும் தேவைகளையும் பெறுவதற்கு இத்துறை வழிகாண்கிறது. ஆகையால், திறம்படக் கலந்துரையாடல், விவாதித்தல், கலந்தாராய்தல், பேச்சு வார்த்தை நடத்தல் ஆகிய கூறுகள் இத்துறையில் இணைக்கப்பட்டுள்ளன.

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1.1 பிறருடன் உரையாடும்போது முக்கியக் கருத்துகளை அடையாளங்காண்பர்; புரிந்து கொள்வர்; பேச்சு, எழுத்து வழியாகச் சரியான மொழிநடையில் பிறருடன் தொடர்பு கொள்ளுவர்.<br>. | **படிநிலை 1**<br>கலந்துரையாடலில் முதன்மை, சார்பு கருத்துகளை அடையாளங்கண்டு அதனை நிரல்படி தொகுப்பர். | • உரையாடலைச் செவிமடுத்தல்.<br>• முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுத்தல்.<br>• தொடர்புடைய தகவல்களைப் பெறக் கேள்விகள் கேட்டல்.<br>• முதன்மைக் கருத்துகள், சார்பு கருத்துகள், தொடர்புடைய கருத்துகள் ஆகியவற்றை வகைப்படுத்துதல்.<br>எ. கா:<br>- சட்டகம்<br>- மனவோட்டவரை<br>- சிந்தனை வரிபடக்கருவி<br>• கருத்துகளை நிரல்படி தொகுத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படி நிலை 2**<br>பிறருடன் தொடர்பு கொள்ளும்போது முக்கியக் கருத்து, உட்கருத்து ஆகியவற்றைப் புரிந்துகொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்வர். | • தலைப்பையொட்டி விவரங்களைச் சேகரித்தல்.<br>• காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்தல்.<br>• சிக்கல் களைய ஏற்புடைய நடவடிக்கைகளை ஊகித்தறிதல்; பரிந்துரைத்தல்.<br>• தகவல்களை வகைப்படுத்தி ஏற்புடைய முடிவுக்கு வருதல்.<br>• அறிக்கை தயாரித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>கலந்துரையாடலில் முன்வைக்கப்படும் ஏடல்களைப் புரிந்துகொண்டு அவை தொடர்பான தகவல்களைத் திரட்டி நல்ல மொழியில் படைப்பர். | • கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட ஏடல்களைப் புரிந்துகொள்ளுதல்.<br>• தொடர்புடைய தகவல்களைப் பல்லூடகம், மேற்கோள் நூல் ஆகியவற்றின்வழி திரட்டுதல்.<br>• ஏற்புடையது, ஏற்புடையதன்று எனும் கோணத்தில் ஆராய்தல்.<br>• அறிக்கை வடிவத்தில் படைத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1.2 சரியான மொழி, பண்பு ஆகியவற்றின் வாயிலாக நியாயமான கோரிக்கைகளை விடுப்பர்; மற்றவர்களின் கோரிக்கைகளுக்கும் செவி சாய்த்துத் துலங்குவர். | **படிநிலை 1**<br>கோரிக்கைக்கு ஏற்புடைய காரண காரியத் தொடர்பை அறிந்து துலங்குவர். | • சிக்கல்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்தல்.<br>• சிக்கல்கள் தொடர்பான வாதங்களை மேற்கொள்ளல்.<br>• கோரிக்கைகளின் பயன்களை ஊகித்தறிதல்; பகுத்தறிவுடன் சிந்தித்தல்.<br>• விவரங்களை வகைப்படுத்தி, தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>ஏரணத்தோடும் ஏற்புடைய காரணகாரியத்தோடும் கோரிக்கையை முன்வைப்பர். | • கோரிக்கைக்கேற்ப தகவல்களைச் சேகரித்தல்.<br><br>• கோரிக்கைகளுக்கான ஏற்புடைய காரணகாரியத் தொடர்பை ஏரணமாகச் சிந்தித்து, கிடைக்கும் ஏடல்களை வகைப்படுத்தித் தொகுத்தல்.<br><br>• கோரிக்கைக்கான நோக்கத்தையும் எதிர்பார்க்கும் விளைவுகளையும் ஆராய்தல்.<br><br>• கடிதம் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br>அறிக்கை வடிவத்தில் கோரிக்கையை முன்வைப்பர். | • கருத்தூற்றுமுறையில் சிக்கலுக்கான காரணங்களை ஆராய்தல்.<br>• கோரிக்கைகளுக்கான தகவல்களைக் கலந்தாய்வு செய்து பட்டியலிடுதல்.<br>• கோரிக்கைகளை அறிக்கை வடிவத்தில் படைத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 2.1 சேவை, பொருள் ஆகியவற்றைப் பெறுவதற்காக விண்ணப்பிப்பதோடு பிறரின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவர். | **படிநிலை 1**<br>பொருட்களை வாங்கும்போதும் விற்கும்போதும் திறம்படத் தொடர்புகொள்வர். | • வாணிகம் தொடர்பான எழுத்துப் படிவங்களை வாசித்துத் தகவல்களைப் பட்டியலிடுதல்.<br>• தேவைப்படும் தொடர்புத்திறன்களைப் பட்டியலிடுதல்.<br>• தற்போது வழக்கில் உள்ள வாணிகக் கலைச்சொற்களை அறிந்து பயன்படுத்துதல்.<br>• போல நடித்தல் - வாணிகச் சூழல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>சேவையைப் பெறுவதற்கும் அளிப்பதற்கும் திறம்படத் தொடர்புகொள்வர். | • கிடைக்கப்பெறும் சேவைகளைப் பற்றி உரையாடுதல்.<br>• சேவைகளைப் பெறுவதற்கும் அளிப்பதற்கும் உரிய வழிவகைகளைக் கலந்துரையாடுதல்.<br>• திறம்படத் தொடர்புகொள்ள வழிவகைகளையும் கலைச்சொற்களையும் அறிந்து உரையாடுதல்.<br>• உரையாடல் தயாரித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>நவீன வாணிகத் தொடர்புக்குத் தேவையான அணுகுமுறையை அறிவர். | • நவீன வாணிகத் தகவல்களைப் பெறக் கலந்துரையாடுதல்.<br>• நவீன வாணிகத்துறை தொடர்பான விளைவுகள் பற்றி உரையாடுதல்.<br>• நவீன வாணிகத்துறைக்கான கலைச்சொற்களை அறிதல்.<br>• தகவல் தொழில்நுட்ப யுகத்தில் நவீன வாணிகத் தொடர்புக்கான அணுகுமுறைகளை அறிந்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 3.1 ஒன்றைப்பற்றிக் கலந்தாய்வு செய்து, பிறருடன் ஒன்றிணைந்து முடிவு செய்வர்; முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுப்பர்; பிறருக்கும் கூறுவர். | **படிநிலை 1**<br>முக்கியக் கருத்துகளையும் அவற்றை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகள், தொடர்புடைய தகவல்கள் ஆகியவற்றைத் தொகுத்துப் பேசுவர். | • குறிவரைவை உள்ளடக்கிய பாடப்பகுதியை வாசித்தல்.<br>• .முக்கியக் கருத்துகளையும் துணைக் கருத்துகளையும் கலந்துரையாடல்வழி கண்டறிந்து வகைப்படுத்துதல்.<br>• முக்கியக் கருத்துக்குத் தொடர்புடைய இதர கருத்துகளைப் பல்வேறு ஊடகங்களின் துணையோடு தொகுத்தல்.<br>• கலந்துரையாடுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 2**<br>தலைப்பைப்பற்றிய சார்பு எதிர்வு கருத்துகளைக் கலந்துரையாடித் தீர்வு காண்பர். | • தலைப்பையொட்டிய கருத்துகளைக் கருத்தூற்றுமுறையில் சேகரித்தல்.<br>• சார்பு எதிர்வு கருத்துகளை வகைப்படுத்துதல்.<br>• முக்கிய, துணைக் கருத்துகளையும் தொடர்புடைய தகவல்களையும் துல்லிதமாக ஆராய்ந்து சட்டகம் தயாரித்தல்.<br>• விவாதக் கட்டுரை எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br><br>ஒரு தலைப்புக்குத் தொடர்பான கருத்துகளைச் சேகரித்து, குறிப்புகள் தயாரிப்பர்; அக்குறிப்புகளின் துணையுடன் சொற்போரில் பங்கேற்பர். | • மேற்கோள் நூல்களைப் பயன்படுத்தித் தலைப்புக்கேற்ற கருத்துகளைச் சேகரித்தல்.<br><br>• சூழலுக்கேற்பக் கலந்துரையாடுதல்.<br><br>• முக்கியக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம் ஆகியவற்றை அறிதல்.<br><br>• சொற்போர் முறையை அறிதல்.<br><br>• சொற்போரில் பங்கேற்றல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 4.1 பேச்சுவார்த்தையின்போது கருத்துத் தெளிவு, கொள்கைப்பிடிப்பு, பரந்த மனப்பான்மை ஆகியவற்றுடன் கருத்துகளைத் தன்னம்பிக்கையோடு மென்மையாகவும் முறையாகவும் வெளிப்படுத்துவர். | **படிநிலை 1**<br>சிக்கலை அடையாளங்கண்டு அதற்குத் தொடர்பான கருத்துகளை வெளியிடுவர். | • வாசித்த பகுதியின் முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• சிக்கலை அடையாளங்கண்டு, அதற்கான காரணகாரியங்களைக் கலந்துரையாடுதல்.<br>• பேச்சுவார்த்தையின்வழி சிக்கலுக்குத் தீர்வு காணுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>பேச்சுவார்த்தையின்போது முன்வைக்க வேண்டிய கருத்துகளை<br><br>அடையாளங்கண்டு கோவையாகக் கூறுவர். | • பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய சூழலை அறிதல்.<br><br>• பேச்சுவார்த்தையைச் செம்மையாக நடத்துவதற்குத் துணைபுரியும் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br><br>• கருத்துகளை நிரல்படி தொகுத்தல்.<br><br>• கருத்துகளைக் கோவையாகக் கூறுவதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி அறிதல்.<br><br>• கருத்துகளைக் கோவையாகக் கூறுதல்; எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>முன்வைக்க வேண்டிய கருத்துகளை அடையாளங்கண்டு கோவையாகக் கூறுவர். | • கொடுக்கப்பட்ட சூழலைப்பற்றிக் கலந்துரையாடுதல்.<br>• முன்வைக்க வேண்டிய கருத்துகளை அடையாளங் கண்டு நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளைத் தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 4.1 பேச்சுவார்த்தையின் போது கருத்துத் தெளிவு, கொள்கைப்பிடிப்பு, பரந்த மனப்பான்மை ஆகியவற்றுடன் கருத்துகளைத் தன்னம்பிக்கையோடு மென்மையாகவும் முறையாகவும் வெளிப்படுத்துவர். | **படிநிலை 1**<br>முன்வைக்க வேண்டிய கருத்துகளை அடையாளங்கண்டு கோவையாகக் கூறுவர். | • கருத்தூற்றுமுறையில் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br>• நம்பகத்தையும் ஏற்புடைமையையும் கலந்துரையாடி முடிவுக்கு வருதல்.<br>• மாற்றுக் கருத்துகளைக் கூறுதல்.<br>• கோவையாக விவரித்துக் கூறுதல்.<br>• தலைப்பையொட்டிய கருத்துகளை மனவோட்டவரைவில் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து ஏற்புடைய முடிவுக்கு வருவர். | • தலைப்பைப்பற்றி வாதித்தல்; கருத்துகளைத் தொகுத்தல்.<br>• குறைநிறைகளைப் பரிசீலித்து விவரங்களைத் தொகுத்தல்.<br>• சொந்தக் கருத்தை வலியுறுத்தி வாதிடுதல்.<br>• கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருதல்; எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>எடுக்கப்பட்ட முடிவை ஆதரிக்க ஏற்ற காரணங்களை முன்வைப்பர். | • காரணங்களை ஏரணமாகச் சிந்தித்துக் கலந்துரையாடித் தெரிவு செய்தல்.<br><br>• தங்களின் சொந்தக் கருத்தைக் கூறுதல்.<br><br>• தகவல்களை ஆராய்ந்து முடிவுக்கு வருதல்.<br><br>• கருத்துகளை விவரித்து எழுதுதல். |

## II. தகவல்துறைக்கான கற்றல்பேறு

மாணவர் தாங்கள் பெறும் தகவல்களை அவர்கள் நிலைக்கேற்றவாறு சரியாக எடுத்துக்கூறுவர்.

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 5.1 தகவல்களைப் பெறுவதற்குக் குறிப்பெடுப்பர். | **படிநிலை 1**<br><br>பேச்சு அல்லது உரையைக் கேட்டு முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுப்பர். | • பேச்சு அல்லது உரையைச் செவிமடுத்தல்.<br>• முக்கியக் கருத்தை அடையாளங்காணுதல்.<br>• குறிப்பெடுத்த விவரங்களைக் கருத்துப்பரிமாற்றம் செய்தல்.<br>• அக்கருத்துகளைச் சட்டக வடிவில் குறிப்பெடுத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>சொற்பொழிவு அல்லது உரை ஆகியவற்றிலுள்ள தகவல்களைக் குறிப்பெடுப்பர். | • உரை அல்லது சொற்பொழிவைச் செவிமடுத்தல்.<br><br>• அவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு மனவோட்டவரைவில் குறிப்பெடுத்தல்.<br><br>• கருத்துகளைத் தொகுத்துக் கூறுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>பேட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றிலுள்ள தகவல்களைக் குறிப்பெடுப்பர். | • பேட்டி, பட்டிமன்றம் ஆகியவற்றைச் செவிமடுத்தல்.<br><br>• முக்கியக் கருத்துகளையும் துணைக் கருத்துகளையும் அடையாளங்கண்டு ஒற்றுமை வேற்றுமைகளை வரிபடக்கருவியில் குறிப்பெடுத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 5.2 பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | **படிநிலை 1**<br><br>உரைநடைப் பகுதிகளை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | • கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br><br>• உரைநடையில் உள்ள அருஞ்சொற்களுக்கு அகரமுதலியின் துணையுடன் பொருள் காணுதல்.<br><br>• ஒவ்வொரு பத்தியிலும் இடம்பெற்றுள்ள முக்கியக் கருவாக்கியங்களை அடையாளங்காணுதல்.<br><br>• முக்கியக் கருத்துகளை மனவோட்டவரைவில் குறிப்பெடுத்தல்.<br><br>• உரைநடையை அடிப்படையாகக் கொண்ட கருத்துணர்ப் பயிற்சிகளைச் செய்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>சிறுகதைகளை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | • தெரிவு செய்யப்பட்ட சிறுகதையை வாசித்து அதில் வரும் கதைமாந்தர்களின் பண்புநலன்களைக் கண்டறிந்து வகைப்படுத்துதல்.<br><br>• கதையில் இடம்பெறும் முக்கியத் தகவல்கள் அல்லது விவரங்களைக் குறிப்பெடுத்தல்.<br><br>• குறிப்பெடுத்த தகவல்கள் அல்லது விவரங்களை நிரல்படுத்திக் கூறுதல்.<br><br>• சிறுகதைகள் உணர்த்தும் உட்கருத்துகளை விவாதித்தல்.<br><br>• சிறுகதையையொட்டிய கருத்துணர்ப் பயிற்சியைச் செய்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>கவிதைகளை வாசித்துத் தகவல்களைத் திரட்டுவர். | • கொடுக்கப்பட்ட கவிதையை மௌனமாக வாசித்தல்.<br><br>• கவிதையில் வரும் சொல், சொற்றொடர் போன்றவற்றிற்குப் பொருள் காணுதல்.<br><br>• கவிதையின் பாடுபொருளை அடையாளங்காணுதல்.<br><br>• கவிதையின் வெளிப்படைப்பொருளையும் மறைபொருளையும் ஆசிரியரின் துணையுடன் புரிந்துகொள்ளுதல்.<br><br>• கவிதையை உரைநடையில் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 6.1 குறிவரைவு, மனவோட்டவரைவு போன்றவற்றின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவல்களை ஆராய்ந்து தொகுப்பர். | **படிநிலை 1**<br><br>வட்டக்குறிவரைவில் அடங்கியுள்ள தகவல்களை ஆராய்வர். | • தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக்குறிவரைவில் அடங்கியுள்ள முக்கியக் கருத்துகளை அறிந்துகொள்ளுதல்.<br><br>• முக்கியக் கருத்துகளைக் குழுவில் பகுப்பாய்வு செய்து வரிசைப்படுத்துதல்.<br><br>• பகுப்பாய்வு செய்த தகவல்களின் காரணகாரியங்களையும் மறைபொருளையும் வகுப்பில் கூறுதல்.<br><br>• குறிவரைவில் காணும் முக்கியத் தகவல்களைத் தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>புள்ளிவிவரப்பட்டியலில் அடங்கியுள்ள தகவல்களை ஆராய்வர். | • தேர்ந்தெடுக்கப்பட்ட புள்ளிவிவரப்பட்டியலில் உள்ள தகவல்களைப் புரிந்துகொள்ளுதல்.<br><br>• புள்ளிவிவரப்பட்டியல் தொடர்பான தகவல்களைத்தழுவி கருத்துணர்ப் பயிற்சிகளைச் செய்தல்.<br><br>• புள்ளிவிவரப்பட்டியலில் ஒற்றுமை வேற்றுமை, ஏற்றத்தாழ்வு, விளைவுகள் போன்ற தகவல்களை அறிய குழுவில் கருத்தூற்றுமுறையில் விவாதித்தல்.<br><br>• புள்ளிவிவரப்பட்டியலில் உள்ள தகவல்களைத் தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>மனவோட்டவரைவில் அடங்கியுள்ள தகவல்களை ஆராய்வர். | • தயாரிக்கப்பட்ட மனவோட்டவரைவில் அடங்கியுள்ள கருத்துகளைக் கலந்துரையாடுதல்.<br><br>• கிடைக்கப்பெற்ற தகவல்களின் காரணகாரியத்தை ஆராய்தல்.<br><br>• கொடுக்கப்பட்ட மனவோட்டவரைவைப் பகுப்பாய்வு செய்யத் தேவையான துணைக் கருத்துகள், விளக்கங்கள், சான்றுகள் ஆகியவற்றை விவாதித்தல்.<br><br>• பகுப்பாய்வு செய்த கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 6.2 ஆராய்ந்த தகவல்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவர். | **படிநிலை 1**<br><br>கேட்ட, படித்த நிகழ்ச்சியைப்பற்றிய விவரங்களைத் தொகுப்பர். | • ஒரு நிகழ்ச்சியைப்பற்றிய விவரங்களைத் திரட்டுதல்.<br><br>• திரட்டிய கருத்துகளைக் குழுவில் விவாதித்து சிறு தலைப்புகளில் வரிசைப்படுத்துதல்.<br><br>• வரிசைப்படுத்தப்பட்ட கருத்துகளை ஏரணமாகத் தொகுத்து வகுப்பில் கூறுதல்.<br><br>• தொகுத்துக் கூறியதை எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>கேட்ட, படித்த நிகழ்ச்சியின் உட்பிரிவுகளுக்கேற்ப தகவலை வரிசைப்படுத்தித் தொகுப்பர். | • ஒரு நிகழ்வுபற்றிய பாடப்பகுதியை வாசித்து விளங்கிக்கொள்ளுதல்.<br><br>• அப்பகுதியைப் பகுப்பாய்வு செய்ய ஏற்புடைய சிறு தலைப்புகளை அடையாளங்காணுதல்.<br><br>• அடையாளங்காணப்பட்ட சிறுதலைப்புகளுக்கேற்ற துணைக் கருத்துகள் , விளக்கங்கள், சான்றுகள் ஆகியவற்றை நிரலோட்டவரைவில் குறித்தல்.<br><br>• பகுப்பாய்வு செய்த கருத்துகளை மதிப்பீடு செய்து தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>முக்கியக் கருத்துகளையும் அவற்றை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளையும் தொகுத்துக் கூறுவர். | • ஏறக்குறைய 250 சொற்களைக் கொண்ட பாடப்பகுதியை மௌனமாக வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br><br>• பாடப்பகுதியில் காணும் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுதல்.<br><br>• பாடப்பகுதியில் வரும் முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br><br>• அடையாளங்கண்ட முக்கியக் கருத்தை வலுப்படுத்தக்கூடிய துணைக் கருத்துகளைக் குழுவில் விவாதித்து அறிதல்.<br><br>• அடையாளங்கண்ட முக்கியக் கருத்துகளையும் துணைக் கருத்துகளையும் 85 சொற்களில் தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.1 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும், தெளிவாகவும் கோவையாகவும் விளக்கமளிப்பர். | **படிநிலை 1**<br><br>வரிசைப்படுத்தப்பட்ட கருத்துகளை விவரித்துக் கோவையாக எழுதுவர். | • தலைப்பையொட்டிய கருத்துகளைப் பல்வேறு மூலங்களிலிருந்தும் ஊடகங்களிலிருந்தும் சேகரித்தல்.<br><br>• குழுவாகக் கலந்துரையாடிக் கருத்தூற்றுமுறையில் விவரங்களைத் திரட்டுதல்.<br><br>• திரட்டிய கருத்துகளை வரிசைப்படுத்துதல்<br><br>• கருத்துகளைக் கோவையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>ஒலிவழியாகக் கேட்ட கருத்துகளைச் சொந்த நடையில் தெளிவாகவும் கோவையாகவும் கூறுவர். | • தகவல் சாதனங்கள்வழி தகவல்களைச் செவிமடுத்தல்.<br><br>• செவிமடுத்த தகவல்களைக் குறிப்பெடுத்தல்.<br><br>• குறிப்பெடுத்த தகவல்களைத் தொகுத்துத் தெளிவாகக் கூறுதல்.<br><br>• கருத்துகளைக் கோவையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>ஒரு பொருள் அல்லது கருத்துத் தொடர்பான விவரங்களை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கோவையாகக் கூறுவர். | • தலைப்புத் தொடர்பான விவரங்களைச் சேகரித்தல்.<br><br>• சேகரித்த விவரங்களை வகைப்படுத்துதல்.<br><br>• திரட்டிய கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துத் தெளிவாகவும் கோவையாகவும் கூறுதல்.<br><br>• கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.3 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும், தெளிவாகவும் கோவையாகவும் அறிக்கை சமர்ப்பிப்பர். | **படிநிலை 1**<br><br>முறையான ஆண்டறிக்கை தயாரிப்பர். | • மாதிரி ஆண்டறிக்கையை வாசித்து அதன் அமைப்பை அறிதல்.<br><br>• ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்தைச் சிறு தலைப்புகளில் பட்டியலிடுதல்.<br><br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்பக் கருத்துகளைக் கலந்துரையாடிச் சிறு தலைப்புகளில் குறிப்பெடுத்தல்.<br><br>• ஆசிரியரின் துணையுடன் ஆண்டறிக்கை தயாரித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>முறையான செயலறிக்கை தயாரிப்பர். | • மாதிரி செயலறிக்கையை வாசித்து அதன் அமைப்பை அறிதல்.<br><br>• செயலறிக்கையின் அமைப்பைக் கலந்துரையாடித் தெளிவு பெறுதல்.<br><br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்பக் கருத்துகளைக் கலந்துரையாடிச் சிறு தலைப்புகளில் குறிப்பெடுத்தல்.<br><br>• கருத்துகளைத் தொகுத்து முறையான செயலறிக்கை எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>முறையான முறையீட்டு அறிக்கை தயாரிப்பர். | • மாதிரி முறையீட்டு அறிக்கையை வாசித்து அதன் அமைப்பு முறையை அறிதல்.<br><br>• கொடுக்கப்படும் சிக்கலுக்கேற்பக் கருத்துகளை ஆராய்ந்து வகைப்படுத்துதல்.<br><br>• முறையீட்டுக்கான காரணகாரியங்களையும் அதன் விளைவுகளையும் அறிதல்.<br><br>• முறையான முறையீட்டு அறிக்கை தயாரித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 7.4 வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் செறிவான பொருளடக்கம், பொருத்தமான ஆதாரம், அறிவுப்பூர்வமான, ஏரணமான கருத்துகள் ஆகியவற்றை மிதமான போக்கில் வெளியிடுவர். | **படிநிலை 1**<br><br>ஏரணத்துடன் கருத்துரைப்பர். | • கொடுக்கப்படும் சிக்கலுக்கான காரணகாரியங்களை ஆராய்தல்.<br><br>• சிக்கலுக்கு ஏரணமான தீர்வுகளை அடையாளங்கண்டு கருத்துரைத்தல்.<br><br>• தொகுத்துக் கூறுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>மிதமான போக்கில் கருத்துரைப்பர். | • கொடுக்கப்படும் சூழலைப்பற்றி மாணவர்கள் தம் கருத்துகளை வெளியிடுதல்.<br><br>• முன்வைக்கப்பட்ட கருத்துகளில் மிதமானவற்றை அடையாளங்காணுதல்.<br><br>• அவற்றைத் தொகுத்து மிதமான போக்கில் கருத்துரைத்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>கருத்துச்செறிவோடும் தக்க சான்றுகளோடும் ஏரணத்துடன் மிதமான போக்கில் கருத்துரைப்பர். | • கொடுக்கப்படும் சூழலுக்கேற்பக் மாணவர்கள் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br><br>• கருத்துகளுக்கான சான்றுகளை ஆராய்தல்.<br><br>• திரட்டிய கருத்துகளையும் சான்றுகளையும் ஏரணத்தோடு கருத்துப்பரிமாற்றம் செய்து தொகுத்தல்.<br><br>• தொகுத்த கருத்துகளைச் செறிவாகவும் மிதமாகவும் விவாதத்தின்போது முன்வைத்தல். |

III இலக்கியத்துறைக்கான கற்றல்பேறு

**இலக்கியத்துறையானது மாணவர்கள் பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்து, அதில் காணப்படும் மொழிச் சிறப்பை உய்த்துணர்தல், ஆக்கப்பூர்வமான அடிப்படையில் எழுத்துப் படிவங்களை உருவாக்குவதோடு மற்ற எழுத்துப் படிவங்களைப் பற்றிய தம் கருத்தைக் கூறுதல், இலக்கியங்களின் நலம் பாராட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.**

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| 8.1 பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணர்வர்; உய்த்துணர்வர்; போற்றுவர். அவற்றையொட்டிச் சொந்தக் கருத்தைக் கூறுவர். | **படிநிலை 1**<br><br>இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து பகுத்தாராய்ந்து கருத்துரைப்பர். | • கவிதை, செய்யுள், கதை, உரைநடை ஆகிய இலக்கியப் படிவங்களை மௌனமாக வாசித்தல்.<br><br>• இலக்கியப் படிவங்களில் காணப்படும் நேரடிப் பொருளை விளக்கிக் கூறுதல்.<br><br>• இலக்கியப் படிவங்களின் பொருளைக் குழுமுறையில் ஆராய்ந்து திரட்டுதல்.<br><br>• இலக்கியப் படிவங்கள் உணர்த்தும் மறைபொருளை உய்த்துணர்ந்து வெளிப்படுத்துதல்.<br><br>• இலக்கியப் படிவங்களில் காணப்படும் கருப்பொருளோடு தம் பட்டறிவை ஒப்பிட்டுப் போற்றுதல்.<br><br>• மனமகிழ்விற்காக இலக்கியப் படிவங்களை வாசித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து தொகுத்தாராய்ந்து போற்றுவர்.<br>- கவிதை<br>- செய்யுள்<br>- கதை<br>- உரைநடை | • கொடுக்கப்பட்ட இலக்கியப் படிவத்தை வாசித்தல்.<br><br>• ஏற்புடைய வரிபடக்கருவிகள்வழி கருத்துகளைத் தொகுத்தல்.<br>எ. கா. ஒற்றுமை - வேற்றுமை காணல்.<br><br>• இலக்கியப் படிவத்தில் காணப்படும் கருத்து, சொல்லாட்சி, உவமை ஆகியவற்றின் நயங்களை ஆராய்தல்.<br><br>• ஆராய்ந்தறிந்த இலக்கியப் படிவத்தில் காணப்படும் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுதல்.<br><br>• இலக்கியப் படிவம் தொடர்பான கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br><br>இலக்கிய வகைகளைப் பொருளுணர்ந்து மதிப்பீடு செய்வர். | • கொடுக்கப்பட்ட இலக்கியப் படிவத்தை மௌனமாக வாசித்தல்.<br>• இலக்கியப் படிவங்களைப் பொருளுணர்ந்து உய்த்துணர்தல்.<br>• இலக்கியப் படிவங்களை உணர்ச்சி, தொனி, வேகம் பொருந்த வாசித்துக் காட்டுதல்.<br>• இலக்கியப் படிவத்தில் காணப்படும் கருப்பொருளை ஆராய்தல்.<br>• கவிதை, கதை, உரைநடை போன்ற இலக்கியப் படிவங்களைத் திறனாய்வு செய்வதற்கான குறிப்புகளைத் திரட்டுதல்.<br>• திரட்டப்பட்ட குறிப்புகளின் துணையுடன் இலக்கியப் படிவத்தைத் திறனாய்வு செய்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 8.2 செய்யுளையும் கவிதையையும் உரைநடையில் எழுதுவர். | **படிநிலை 1**<br><br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; உரைநடையில் எழுதுவர். | • தெரிவு செய்யப்பட்ட கவிதைகளையும் செய்யுள்களையும் ஆழ்ந்து வாசித்தல்.<br><br>• கவிதைகளும் செய்யுள்களும் உணர்த்தும் கருத்துகளைக் குழுமுறையில் கலந்தாராய்தல்.<br><br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைத் தொகுத்தல்.<br><br>• திரட்டப்பட்ட கருத்துகளை நிரல்படுத்துதல்.<br><br>• நிரல்படுத்திய கருத்துகளைச் சிந்தனைமீட்சி செய்தல்.<br><br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைப் பிழையின்றி உரைநடையில் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; தொகுத்து எழுதுவர். | • கவிதை, செய்யுள் ஆகியவற்றை ஆழ்ந்து வாசித்தல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் உட்பொருளைக் கலந்தாய்ந்து திரட்டுதல்.<br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் கருத்துகளைக் கண்ணிகளுக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளை முழுமையாக உரைநடையில் தொகுத்து எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 3**<br><br>கவிதை, செய்யுள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வர்; உரைநடையில் விளக்கி எழுதுவர். | • கவிதை, செய்யுள் ஆகியவற்றை ஆழ்ந்து வாசித்தல்.<br><br>• அகரமுதலி, மேற்கோள் நூல்களின்வழி கவிதை மற்றும் செய்யுளின் பொருளை அறிதல்.<br><br>• கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளை வரிகளுக்கேற்ப நிரல்படுத்துதல்.<br><br>• நிரல்படுத்திய பொருளைக் கொண்டு உரைநடையில் விளக்கி எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.1 பொருத்தமான மொழியில் கருத்துச் செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர். | **படிநிலை 1**<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- கதை<br>- உரை<br>- கடிதம் | • மாதிரி இலக்கியப் படிவங்களை வாசித்தல்.<br>• இலக்கியப் படிவத்தில் உள்ள கூறுகளை மீட்டுணர்தல்.<br>• கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ப கருத்துகளைக் குறிப்பெடுத்தல்.<br>• பல்வேறு ஊடகத்தின்வழி பெறப்பட்டக்கருத்துகளைக் கொண்டு குறிப்புகளை விரிவு படுத்துதல்.<br>• இரண்டு அல்லது மூன்று பத்திகளில் எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- உரையாடல்<br>- பேட்டி | • தலைப்புக்கேற்ற கருத்துகளைச் சேகரித்தல்.<br>• முதன்மை, சார்பு கருத்துகளை அடையாளங்கண்டு நிரல்படுத்தி எழுதுதல்.<br>• குழுமுறையில் திரட்டிய கருத்துகளை 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>கருத்துச்செறிவு, நற்சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கிய எழுத்துப் படிவங்களைப் படைப்பர்.<br>- கட்டுரை<br>- அறிக்கை<br>- கவிதை | • குழுவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பை ஆய்வு செய்தல்.<br>• முதன்மை, சார்பு கருத்துகளை அடையாளங்கண்டு மனவோட்டவரைவில் தயாரித்தல்.<br>• குழுக்களுக்கிடையே கருத்துகளை ஒப்பீடு செய்தல்.<br>• கருத்துகளை முதன்மைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளை விரிவாக்கம் செய்தல்.<br>• விரிவாக்கம் செய்த கருத்துகளை 200 சொற்களுக்குக் குறையாமல் எழுத்துப் படிவங்களாகப் படைத்தல்.<br><br>கவிதை<br>• யாப்பிலக்கணத்தை மாதிரிக் கவிதைகளின்வழி புரிந்துகொள்ளுதல்.<br>• மரபுக்கவிதைகளை உய்த்துணர்ந்து வாசித்தல்.<br>• மரபுக்கவிதைகளை மற்ற கவிதை வகைகளோடு ஒற்றுமை வேற்றுமை காணுதல்; ஒப்பீடு செய்தல்.<br>• நான்கு வரிகளைக் கொண்ட மரபுக்கவிதையை இயற்றுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.2 பிறருடைய படைப்புகளைக் கருத்துப்பிழையின்றி ஒரு வடிவத்திலிருந்து வேறு வடிவத்திற்கு மாற்றியமைப்பர். | **படிநிலை 1**<br><br>கவிதையைப் பிழையின்றிக் கதையாக மாற்றி எழுதுவர். | • கொடுக்கப்பட்ட கவிதையை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br><br>• முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்.<br><br>• அடையாளங்கண்ட கருத்துகளைத் தொகுத்து விரிவாக்கிக் கதையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br><br>நேர்காணலைக் கருத்துப் பிழையின்றி உரைநடையாக எழுதுவர். | • நேர்காணலை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்<br><br>• முக்கியக் கருத்துகளை அடையாளங்கண்டு முறைமைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br><br>• நிரல்படுத்திய கருத்துகளை உரைநடையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>உரையாடலைக் கருத்துப்பிறழ்வின்றிக் கட்டுரையாக மாற்றி எழுதுவர். | • உரையாடலைச் செவிமடுத்துப் புரிந்துகொள்ளுதல்.<br>• முக்கியக் கருத்துகளைக் குறிப்பெடுத்தல்.<br>• கருத்துகளை முறைமைக்கேற்ப நிரல்படுத்துதல்.<br>• நிரல்படுத்திய கருத்துகளைக் கட்டுரையாக எழுதுதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.3 கவிதைகளை நயத்துடன் வாசிப்பர். | **படிநிலை 1**<br><br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடன் ஒப்புவிப்பர். | கவிதை<br>• எளிமையான கவிதையில் சந்தம், எதுகை, மோனை முதலியவற்றை அறிதல்.<br>• கவிதையில் காணப்படும் சொல்நயம், பொருள்நயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• கவிதையை மனனம் செய்தல்.<br>• கவிதையை ஒப்புவித்தல்.<br><br>செய்யுள்<br>• கருத்தூற்றுமுறையில் செய்யுளின் பொருளைக் கலந்தாராய்தல்.<br>• செய்யுளில் காணப்படும் சொல்நயம், மொழிநயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• செய்யுளை மனனம் செய்து ஒப்புவித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | **படிநிலை 2**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் ஒப்புவிப்பர். | கவிதை<br>• கவிதையைச் செவிமடுத்தல்.<br>• அகரமுதலியின் துணையுடன் கவிதைக்கான சொற்பொருள் விளக்கத்தை அறிதல்.<br>• கவிதையை வாசித்து சொல்நயம், பொருள்நயம், மொழிநயம், உணர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து அறிதல்.<br>• இரண்டு கண்ணிகளுக்கு மேலுள்ள கவிதையை நயத்துடனும் உணர்ச்சியுடனும் வகுப்பின் முன்னிலையில் ஒப்புவித்தல்.<br><br>செய்யுள்<br>• செய்யுளைச் செவிமடுத்தல்.<br>• செய்யுளைப் பொருளுணர்ந்து உணர்ச்சியுடனும் நயத்துடனும் கூறுதல்.<br>• மேற்கோள் நூல்களின் துணையுடன் செய்யுள் தொடர்பான மேல் விவரங்களைத் திரட்டுதல்.<br>• செய்யுளை மனனம் செய்து ஒப்புவித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>கவிதை, செய்யுள் ஆகியவற்றின் பொருளறிந்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் பாவனையுடனும் ஒப்புவிப்பர். | கவிதை<br>• கவிதையைப் பொருளுணர்ந்து உணர்ச்சியுடனும் நயத்துடனும் கூறுதல்.<br>• கவிதையில் காணப்படும் மொழிநயத்தையும் நன்னெறிக்கூறுகளையும் அறிந்து வாசித்தல்.<br>• நான்கு கண்ணிகளுக்கு மேலுள்ள கவிதையை மனனம் செய்து நயத்துடனும் உணர்ச்சியுடனும் பாவனையுடனும் ஒப்புவித்தல்.<br><br>செய்யுள்<br>• செய்யுளைப் பொருளுணர்ந்து உணர்ச்சியுடனும் நயத்துடனும் வாசித்தல்.<br>• செய்யுளின் முழுப்பொருளையும் ஆராய்ந்து எழுதுதல்.<br>• செய்யுளை மனனம் செய்து ஒப்புவித்தல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| 9.4 பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றைப் பொருளறிந்து பயன்படுத்துவர். | **படிநிலை 1**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றின் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை, உரை ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • நீதிக்கதைகள், சிறுகதைகள் போன்ற படிவங்களை வாசித்தல்.<br>• படிவங்களில் காணப்படும் மொழியணிகளைப் பட்டியலிடுதல்.<br>• சூழலுக்கேற்ப மொழியணிகளைப் பொருள் விளங்க விளக்கி எழுதுதல்.<br>• மொழியணிகளை உரையில் சூழலுக்கேற்பப் பயன்படுத்துதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 2**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகிய மொழியணிகளைப் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • மொழியணிகள் இடம்பெற்ற பாடப்பகுதியை வாசித்தல்.<br>• சூழலுக்கேற்ப மொழியணிகளின் பொருளை ஊகித்து விளக்குதல்.<br>• கருத்தூற்றுமுறையின்வழி மொழியணிகளின் பொருள் அறிதல்.<br>• மொழியணிகளில் அடங்கியுள்ள பண்புக்கூறுகளைச் சிந்தனைமீட்சி செய்தல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்தல்.<br>• மொழியணிகளைக் கதை, கட்டுரைகளில் சூழல் பொருந்த பயன்படுத்துதல். |

| கற்றல்பேறு | படிநிலை வளர்ச்சி | மூலங்கள் / அணுகுமுறைகள் / நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **படிநிலை 3**<br>பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றின் பொருளறிந்து வாக்கியம், கட்டுரை, கதை, உரை, நாடகம் ஆகியவற்றில் பயன்படுத்துவர். | • நாடகங்களைச் செவிமடுத்தல்.<br>• நாடகத்தில் இடம்பெற்ற மொழியணிகளைப் பட்டியலிடுதல்.<br>• மொழியணிகளைப் பொருள் விளங்க சூழலுக்கேற்ப அறிந்து எழுதுதல்.<br>• மொழியணிகளை நாடகங்களில் சூழலுக்கேற்பப் பயன்படுத்துதல். |

**இலக்கணம்**

மொழியாற்றலுக்கு அடிப்படையாக அமைவது இலக்கணமாகும். இலக்கணத்தை நேரடியாகக் கற்பிக்காமல் வரையறுக்கப்பட்டுள்ள கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆகவே, மொழியை வழுவின்றிப் பயன்படுத்துவதற்குப் பின்வரும் இலக்கணக் கூறுகள் திட்டமிட்டுக் கற்பிக்கப்படவேண்டும்.

.

1. **எழுத்தியல்**

   1.1 **போலி**
   - முதற்போலி
   - இடைப்போலி
   - கடைப்போலி

   1.2 **குற்றியலுகரம்**
   - வன்தொடர்
   - மென்தொடர்
   - இடைத்தொடர்
   - ஆய்தத்தொடர்
   - நெடில்தொடர்
   - உயிர்த்தொடர்

2. **சொல்லியல்**

   2.1 **பெயர்ச்சொல்**
   - வேற்றுமை
   - ஆகுபெயர்
   - திணை
   - பால்
   - எண்
   - இடம்

**2.2 வினைச்சொல்**
- உடன்பாடு
- எதிர்மறை

**2.3 அடை**
- பெயரடை
- வினையடை

**2.4 சொல்லிலக்கணம்**
- பகுபதம் ( பகுதி / விகுதி )
- பகாப்பதம்

**2.5 யாப்பிலக்கணம்**
- சந்தம்
- எதுகை
- மோனை

**3. தொடரியல்**

**3.1 வாக்கியவகை**
- தனி
- தொடர்
- கலவை

**3.2 தொகைநிலைத் தொடர்**
- வேற்றுமைத் தொடர்
- வினைத் தொடர்
- உவமைத் தொடர்
- பண்புத் தொடர்
- உம்மைத் தொடர்

## 4. புணரியல்

**4.1 தோன்றல்**

- தனிக் குற்றெழுத்து + உயிர்
  - கண் + ஆடி = கண்ணாடி

**4.2 "மை" ஈற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி**

- வெம்மை + நீர் = வெந்நீர்
- தண்மை + நீர் = தண்ணீர்
- பசுமை + தமிழ் = பைந்தமிழ்

## 5. வலிமிகும் இடங்கள்

**5.1 உவமைத்தொகையில் வலிமிகும்**

- மலர் + கை = மலர்க்கை

**5.2 ஆறாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகும்**

- பலா + சுளை = பலாச்சுளை

**5.3 ஆய், போய் என்று முடியும் வினையெச்சத்திற்குப்பின் வலிமிகும்**

- அன்பாய் + பேசினான் = அன்பாய்ப் பேசினான்

**5.4 தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகாரத்தின்பின் வலிமிகும்**

- கனா + கண்டான் = கனாக் கண்டான்

## 6. வலிமிகா இடங்கள்

**6.1 விளித்தொடரில் வலிமிகாது**
- தம்பீ + கேள் = தம்பீ கேள்

**6.2 வினைத்தொகையின்பின் வலிமிகாது**
- ஊறு + காய் = ஊறுகாய்

**6.3 பெயரெச்சத்தின்பின் வலிமிகாது**
- படித்த + பையன் = படித்த பையன்

## இலக்கியம்

### 1.0 செய்யுள்

#### 1.1 திருக்குறள்

i) இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள் 517)

ii) உடைய ரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்
உடையது உடையரோ மற்று. (குறள் 591)

iii) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (குறள் 783)

## 1.2 பல்வகைச் செய்யுள்கள்

### i) விவேக சிந்தாமணி

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல.

### ii) நளவெண்பா

*நளனது நல்லாட்சி*

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம் கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு.

*தமயந்தி வருகை*

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

iii) **சிலப்பதிகாரம்**
***கற்புத் தெய்வம்***

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடி,
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!

**1.3 பழமொழி**

i) அள்ளாது குறையாது இல்லாது பிறவாது.
ii) ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
iii) கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
iv) ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
v) கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.
vi) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
vii) நிறைகுடம் தளும்பாது.
viii) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
ix) இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து.
x) குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

### 1.4 மரபுத்தொடர்

i) அண்டப்புரட்டன்.
ii) ஆசாரக் கள்ளன்.
iii) உச்சிக் குளிர்தல்.
iv) இரண்டுங் கெட்டான்.
v) ஈவிரக்கம்.
vi) காதில் பூ வைத்தல்.
vii) முட்டுக் கட்டை.
viii) தொன்று தொட்டு.
ix) கை நனைத்தல்.
x) வெள்ளிடை மலை.

### 1.5 உவமைத்தொடர்

i) குன்றின் மேலிட்ட விளக்கு போல
ii) விழலுக்கு இறைத்த நீர் போல
iii) பசுமரத்தாணி போல
iv) மாலுமி இல்லாத கப்பல் போல
v) அழகுக்கு அழகு செய்வது போல

### 1.6 இரட்டைக்கிளவி

i) திமுதிமு
ii) தளதள
iii) மளமள
iv) சரசர
v) தடதட